

அரியலூர் மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் ரிதன்யா மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த ”திராவிட பொங்கல் விளையாட்டு விழா நேற்று கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி கூடலூரில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் செம்பியன் சிவ. தியாகராஜன் அருணா. கோதண்டபாணி கூடலூர் ஜெயராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திருவெறும்பூர் குண்டூர் 100 அடி சாலையில்

# குதிரைப் பந்தயம் : அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜன. 8 -

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள குண்டூர் 100 அடி சாலையில், தமிழ்நாடு மாநில குதிரை உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் நலச்சங்கத்தின் சார்பில் முதலாம் ஆண்டு குதிரை பந்தயம் நடந்தது.

இந்த போட்டியினை தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த போட்டியின் போது குதிரை ஒன்று மற்றும் இரண்டு பிரிவுகளிலும் அளவு குதிரை 43 மற்றும் 45 ஆகிய பிரிவுகளிலும், நடு குதிரை மற்றும் பெரிய குதிரை என ஆறு பிரிவுகளில் குதிரை பந்தயம் நடைபெற்றது.

புதுக்குதிரை ஒன்றுக்கு மற்றும் இரண்டிற்கு முதல் பரிசு ரூ20 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ15 ஆயிரம், மூன்றாவது பதிவு ரூ12ஆயிரம் நான்காவது பதிவு ரூ10 ஆயிரம்,



43 அளவு குதிரை 7மைல் தூரம் முதல் பரிசு ரூ25ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ 20 ஆயிரம், மூன்றாவது

பரிசு ரூ15 ஆயிரம், நாலாவது பரிசு ரூ 12 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

45 அளவு குதிரை 8மைல் தூரம் முதல் பரிசு ரூ30 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ25 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ20 ஆயிரம் நான்காவது பரிசு ரூ12 ஆயிரம் வழங்கப்பட்டது.

நடு குதிரை 9 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ40 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ30 ஆயிரம் மூன்றாவது பதிவு ரூ20ஆயிரம், நான்காவது பரிசு ரூ13 ஆயிரம் வழங்கப்பட்டது.

பெரிய குதிரை 10 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ50 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ 40 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ30 ஆயிரம் நான்காவது பரிசு ரூ15 ஆயிரம் வழங்கப்பட்டது.

போட்டியில் சீறிப் பாய்ந்து வெற்றி பெற்ற குதிரைகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கோப்பையும் ரொக்க பரிசினையும் வழங்கினார்.

ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

### பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில், துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

# தெருமுனைப் பிரச்சார கூட்டம் - வெற்றி வாக்குச்சாவடி சிறப்புக்கூட்டம்!

## க.நாகநந்தினி யுவராஜ், — வீ.ஜெகதீசன் சிறப்புரை!

பெரம்பலூர், ஜன. 8 -

பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.இராஜ்குமார் தலைமையில், பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை

வரவேற்புரையில், ஒன்றிய துணைச் செயலாளர் தேவகி நடராஜன், நா.ஆதித்யன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, ஒன்றிய பொருளாளர் இரா. கலையரசன், ஒன்றிய அவைத்தலைவர் மு.இராமச்சந்திரன்,

கிளைச் செயலாளர்கள் பி.ஜெயராமன், சி.கலையரசன், மா.கார்த்திகேயன், ரா.சஞ்சீவ்குமார், பெ.திலகேஷ்வரன், மாவட்ட பிரதிநிதிகள்வா.இராஜ்குமார், சி.இரமேஷ், சு.பிரபு ஆகியோர் முன்னிலையில் தெருமுனைப் பிரச்சார கூட்டம் மற்றும் வெற்றி வாக்குச்சாவடி சிறப்புக்கூட்டம் வடக்கு மாதவி கிராமத்தில் நடைபெற்றது.

இந்த தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கழக செய்தி தொடர்பாளர் க. நாகநந்தினி யுவராஜ் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இதில் தி.மு.க. அரசின் சாதனைகளையும், செயல்படுத்தப்பட்ட திட்டங்களையும் விரிவாக எடுத்து கூறினார்கள். தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு.விஜயரத்தினம், SRT.ராமலிங்கம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், லெட்சுமணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாதவி கிளைச் செயலாளர் ரா.சதீஷ்குமார் நன்றியுரையாற்றினார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கோணை மற்றும் கணக்கன் குப்பம் ஆகிய ஊராட்சியில் நடைபெற்ற சமூக நீதிக்கான திராவிடப் பொங்கல் வாலிபால், ஹாக்கி விளையாட்டுப் போட்டியை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மத்திய, ஒன்றிய செயலாளர் விஜயராகவன், ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## கொளத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜன. 8 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 321 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.01.2026), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69அ, தாந்தோன்றி அம்மன் கோயில் தெரு, அகரம், ஆனந்தன் பூங்கா அருகில் 2) வட்டம் 69, 18வது தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

# மாவட்டம் முழுவதும் மகளிரை திரட்டி சாதி, மத, ஏற்றத்தாழ்வு பேதமற்ற “திராவிடப் பொங்கல்” விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஜன. 8 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க. இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான எம் .கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா. குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா. மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், நகரக் கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து,, மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பிரமணியன், முகமது சுல்தான், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தஞ்சாவூரில் வரும் 26ஆம் தேதி வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல தி.மு.க. மகளிர் மாநாட்டிற்கு நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டு தோறும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியினர் பெரும் அளவில் கலந்து கொள்ள செய்வது எனவும், மகளிர் தி.மு.க. மாநாட்டிற்கு மகளிர் பெரும் அளவில் கலந்து கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஏற்பாடுகளை செய்து, மாநாட்டிற்கு செல்லும் மகளிர் குறித்த பட்டியலை தயார் செய்து மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டும் என்றும்,

இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதையடுத்து தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச் சாவடிகளில் 4 நாட்கள் நடைபெற்ற சிறப்பு முகாமில் கலந்து கொண்டு சிறப்பாக பணியாற்றிய

மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர மன்ற துணை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள்,, துணைத் தலைவர், மற்றும் உறுப்பினர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்டுகள் (பி.டி.ஏ), வாக்சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி), கிளை, வார்டு நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து கழகத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

மாநிலம் முழுவதும் கழகத்தின் சார்பில் மூன்று கட்டங்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுப்பொருட்களை வழங்கிட வேண்டும் என்பதற்கு இனங்க ஜனவரி 3ம் தேதி முதல் 9ம் தேதி வரை பேரூர் உள்ளடக்கிய ஒன்றியம் நகரம் பகுதி அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைந்த ஒன்றியம் ஒருங்கிணைந்த தகரம் அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திடுவது என்றும். கிரிக்கெட் வாலிபால், கபடி, கால்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம் மிதிவண்டிப் போட்டி ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் குறைந்தபட்சம் தலா 3 போட்டிகளை நடத்திடுவது என்றும், ஒன்றியநகர அளவில் வெற்றி பெற்ற அணிகளைக் கொண்டு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஜனவரி 10ஆம் தேதி தொடங்கி பொங்கல் திருவிழா வரை நடத்தி பரிசுகளை வழங்கிடுவது என்றும்,

போட்டிகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணியினரும் சிறப்பாக நடத்தியது என்றும், நாகை மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகள் வார்டுகள் அளவில் மகளிரைத் திரட்டி சாதி, மத, ஏற்றத் தாழ்வு பேதமற்ற “திராவிடப் பொங்கல்” வைத்து கொண்டாடிடுவது என்றும், அனைத்து வீடுகள் முன்பும் ‘சமத்துவம் பொங்கட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ என எழுதி ‘திராவிடப் பொங்கல்’ கோலமிட்டு, பெண்கள் குழந்தைகளுக்கான கோலப் போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்,ரகுபதி — சிவ,வீ,மெய்யநாதன் மற்றும் கே,கே,செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தார்கள்!

புதுக்கோட்டை, ஜன. 8 -

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.01.2026 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் “ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை” அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஜல்லிக்கட்டு உறுதி மொழியான, “எங்கள் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை கொண்டாடிடவும், நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பேணிக்காப்போம் என்றும், விளையாட்டில் ஈடுபடும் காளைகளுக்கு எவ்வித ஊறும் செய்யமாட்டோம் என்றும், வீரர்களான நாங்கள் சிறந்த நெறிமுறைகளை பின்பற்றுவோம் என்றும், இவ்விளையாட்டில் பங்கேற்கும் காளைகளுக்கும், வீரர்களுக்கும் சிறுதீங்கும் நேராமல் விளை யாடுவோம் என்றும் உளமாற உறுதி கூறுகிறோம்” என்ற ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் வாசிக்க, அதனை பின்தொடர்ந்து, அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் இந்த ஆண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டியாக தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டுப் போட்டி துவக்கி வைக்கப் பட்டுள்ளது. இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் மற்றும் 600 காளைகள் பங்கேற்று சிறப்பாக ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் ஆம்புலன்ஸ் மற்றும் பணியாளர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் காளைகள் முழு மருத்துவ பரிசோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டனர். மேலும் இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியானது அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, துணைக் காவல் கண்காணிப்பாளர் பிருந்தா, கந்தர்வக் கோட்டை வட்டாட்சியர். எம்.ரமேஷ், கந்தர்வக் கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் பி. சேகர், எஸ்.பார்த்திபன், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், கீரை தமிழ் ராஜா, மா.தமிழ் அய்யா, இளைய ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



மன்னார்குடி முன்னாள் நகர செயலாளராக இருந்த மறைந்த அய்யா ப.தமிழரசன் அவர்களின் நினைவு தினத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முரசொலி எம்.பி., கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலாம் ஜி.பாலு,கருடாஇளவரசன் ,நகர செயலாளர் வீரா. கணேசன், அவைதலைவர் க.தன்ராஜ், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரிசிவா, நா.கவியரசு ,கே.வி.கே.ஆனந்த் ,நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், மாவட்ட பிரதிநிதி ஜெ .உத்தமன் ,முன்னாள் நகர்மன்ற தலைவர் கார்த்திகா மற்றும் ஒன்றிய ,நகர நிர்வாகிகள் ,கழக தோழர்கள் பங்கேற்றனர்.